பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

31 05 2024 **FRIDAY** 7 15 **AM**

வணக்கம். ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நாடுமுழுவதும் 57 தொகுதிகளில் 7வது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவிற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் தீவிரமாக மேற்கொண்டுள்ளது.
- வேளாண் உற்பத்தியை அதிகரிக்க புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் பின்பற்ற வேண்டியது அவசியம் என குடியரசுத் துணைத் தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் கூறியுள்ளார்.
- அதிகபட்ச மின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் நாட்டின் மின் உற்பத்தி அதிகரித்துள்ளதாக மத்திய மின்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- பாலியல் வன்கொடுமை வழக்கில் சிக்கியுள்ள மக்களவை உறுப்பினர் திரு. பிரஜ்வல் ரேவண்ணா பெங்களூரு விமான நிலையத்தில் இன்று அதிகாலை கைது செய்யப்பட்டார்.
- உலகக் கோப்பை துப்பாக்கி சுடும் போட்டி ஜெர்மனியில் இன்று தொடங்குகிறது.

<<<<>>>>

நாடுமுழுவதும் 57 தொகுதிகளில் 7வது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவிற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் தீவிரமாக மேற்கொண்டுள்ளது.

எழு மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த 57 தொகுதிகளில் நாளை வாக்குப் பதிவு நடைபெறுகிறது.

பீகாரில் 8, ஹரியானாவில் 4, ஜார்க்கண்டில் மூன்று, ஒடிசாவில் 6, பஞ்சாப் மற்றும் உத்தரப் பிரதேசத்தில் தலா 13, மேற்கு வங்கத்தில் 9 சண்டிகரில் ஒரு தொகுதியிலும் நாளை வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது.

வாக்குப்பதிவுக்கான முன்னேற்பாடுகளை தேர்தல் ஆணையம் முழுவீச்சில் மேற்கொண்டு வருகிறது.

வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஹிமாச்சலப்பிரதேசத்தில் 7ஆயிரத்து 992 வாக்குச்சாவடி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், இவற்றில் 369 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளதாகவும், அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

மாநிலத்தில் ஆறு சட்டப்பேரவை தொகுதிகளுக்கான இடைத்தேர்தலும் நாளை நடைபெறவுள்ள நிலையில், அதற்கான விரிவான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

உத்தரபிரதேசத்தில் தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

குஷிநகர் மற்றும் கோரக்பூர் மாவட்டங்களில் நேபாளத்துடனான எல்லையில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

பஞ்சாபில் வெயிலின் தாக்கத்தை சமாளிக்க, விரிவானஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

வாக்குச்சாவடிகளில் நிழற்பந்தல்கள் அமைக்கப்பட்டு, குடிநீர் மற்றும் காற்றோட்டத்திற்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அந்த ஆணையம் தெரிவித்துள்ளது.

ஜார்க்கண்ட் மாநிலத்தில், 8 ஆயிரத்து 963 வாக்குச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், இவற்றில் 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<>>>>

வேளாண் உற்பத்தியை அதிகரிக்க புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் பின்பற்ற வேண்டியது அவசியம் என குடியரசுத் துணைத் தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

உத்தரகாண்ட் மாநிலம் உதம்சிங்நகர் மாவட்டத்தில் உள்ள கோவிந்த் வல்லப் பந்த் வேளாண் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை நேற்று அவர் பார்வையிட்டார்.

பின்னர் அங்குள்ள ஆசிரியர்கள் மற்றும் வல்லுநர்களிடையே பேசிய அவர், வேளாண் தொடர்பான மதிப்பு கூட்டுதல் தொழில்களில் விவசாயிகளை ஈடுபடுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினார்.

2047-ம் ஆண்டில் வளர்ந்த இந்தியா என்ற இலக்கை எட்ட விவசாயிகளின் பங்களிப்பு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என திரு ஜெக்தீப் தன்கர் கூறினார்.

<<<<>>>>

அதிகபட்ச மின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் நாட்டின் மின் உற்பத்தி அதிகரித்துள்ளதாக மத்திய மின்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நேற்று நாடு முழுவதும் மின் தேவை 250 ஜிகாவாட் அளவை எட்டியதாகவும் இது, இதுவரை இல்லாத அதிகபட்ச அளவு எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக வெப்பம் மற்றும் தொழில் துறை பயன்பாடுகள் அதிகரித்ததன் காரணமாக மின் தேவை அதிகரித்துள்ளதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

நாட்டின் வட பகுதியில் மின் தேவை 86 புள்ளி 7 ஜிகாவாட்டாகவும் மேற்கு பகுதியில் அதிகபட்ச தேவை 74 புள்ளி 8 ஜிகாவாட்டாகவும் அதிகரித்ததாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தேவைக்கு ஏற்ப மின் உற்பத்தியும் அதிகரித்துள்ளதாகவும், அனல் மின் உற்பத்தி இதுவரை இல்லாத அளவுக்கு 176 ஜிகாவாட் என்ற உச்சத்தை எட்டியுள்ளது எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சூரிய மின் சக்தி மற்றும் காற்றாலை மின் உற்பத்தி ஆகியவையும், மின் தேவையை பூர்த்தி செய்வதில் குறிப்பிடத்தக்க பங்கு வகிப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தித் திறனை மேம்படுத்தி நாட்டின் எரிசக்தி தேவைகளைப் பூர்த்தி செய்வதில் மின்துறை அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

நாட்டின் உள்ளூர் மொழிகளில் இதழியலை பலப்படுத்த வேண்டியது அவசியம் என்று மாநிலங்களவைத் துணைத் தலைவர் திரு ஹரிவன்ஷ் கூறியுள்ளார்.

இந்தி இதழியல் தினம் நேற்று கொண்டாடப்பட்டதையொட்டி புதுதில்லியில் உள்ள இந்திரா காந்தி தேசிய கலை மையத்தில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் அவர் பங்கேற்று உரையாற்றினார்.

தாய்மொழி இதழியல் நாட்டின் பொருளாதார நிலையுடன் தொடர்புடைய அம்சம் என்று அவர் குறிப்பிட்டார்.

பத்திரிகைத் துறையைப் பொறுத்தவரை கருத்துகளையும் கொள்கைகளையும் மட்டுமே விமர்சிக்க வேண்டும் எனவும் தனிநபர்களை விமர்சிக்க கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

<<<<>>>>

மக்களவை உறுப்பினர் திரு. பிரஜ்வல் ரேவண்ணா இன்று கைது செய்யப்பட்டார்.

பாலியல் வன்கொடுமை வழக்கில் சிக்கியுள்ள அவர், வெளிநாடு சென்றிருந்த நிலையில் இன்று அதிகாலை பெங்களூரு வந்தபோது, விமான நிலையத்தில் அவரை சிறப்பு புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த காவல்துறை அதிகாரிகள் கைது செய்தனர்.

<<<<>>>>

கனமழை மற்றும் வெள்ளத்தால் மணிப்பூர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் காரணமாக இம்பால் நகரை இணைக்கும் பெரும்பாலான சாலைகள் நீரில் மூழ்கியுள்ளன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, தேவையான உதவிகளை வழங்க 24 மணி நேர கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

மணிப்பூர் காவல்துறை, ராணுவம், அசாம் ரைபிள்ஸ், தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையினர் தொடர்ந்து மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

மாநிலத்தில் நிலவும் சூழலைக் கருத்தில் கொண்டு இன்று பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் மணிப்பூரின் பெரும்பாலான மாவட்டங்களில் இன்றும் கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சத்தீஷ்கரின் பிஜப்பூர் மாவட்டத்தில் 16 மாவோயிஸ்டுகளை பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து ஏராளமான வெடிபொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<>>>>

ரெட்ஃப்ளாக் 24 என்ற சர்வதேச பயிற்சியில் பங்கேற்பதற்காக இந்திய விமானப்படை வீரர்கள் மற்றும் விமானங்கள் அமெரிக்காவின் அலாஸ்காவில் உள்ள ஈல்சன் விமானப்படை தளத்திற்குச் சென்றடைந்தனர்.

இரண்டு வாரங்கள் நடைபெறும் இந்தப் பயிற்சியில் இந்திய விமானப்படையின் ஐ.எல்-78 ரக விமானங்கள், சி-17 விமானங்கள் மற்றும் ரஃபேல் போர் விமானங்கள் பங்கேற்கின்றன.

<<<<>>>>

பயங்கரவாத தடுப்பில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இந்தியாவும் ஜப்பானும் முடிவு செய்துள்ளன.

இந்தியா – ஜப்பான் இடையேயான பயங்கரவாத எதிர்ப்பு தொடர்பான கூட்டு பணிக்குழுவின் ஆறாவது கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின்போது, எல்லை தாண்டிய பயங்கரவாதம், பயங்கரவாதத்திற்கு நிதியுதவி வழங்குவதைத் தடுத்தல், போதைப் பொருள் தடுப்பு உள்ளிட்டவை குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

வெப்ப அலையால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ராஜஸ்தான் மாநில அரசுக்கு அம்மாநில உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வெப்ப அலை மற்றும் பருவநிலை மாற்றம் குறித்து தாமாக முன்வந்து விசாரித்த உயர்நீதிமன்றம், ராஜஸ்தானில் பருவ நிலை மாற்ற செயல் திட்டத்தை திறம்பட செயல்படுத்த உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு மாநில தலைமைச் செயலாளருக்கு உத்தரவிட்டது.

<<<<>>>>

தென்மேற்கு பருவமழை கேரளாவில் நேற்று தொடங்கிய நிலையில், அடுத்த சில நாட்களில், நாட்டின் பிற இடங்களிலும் தொடங்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, பல்வேறு பகுதிகளில் வெப்பத்தின் தாக்கம் தொடர்ந்து அதிகரித்து காணப்படுகிறது.

வெப்பத்தை தணிப்பதற்கான உணவு முறைகளை மக்கள் பின்பற்றி வருகின்றனர்.

தமிழகத்தின் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வெப்பம் அதிகரித்து காணப்படும் நிலையில், நுங்கு மற்றும் பதனீர் விற்பனை அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ராஜா 46 செகண்ட்ஸ்)

<<<<>>>>

உலகக் கோப்பை துப்பாக்கி சுடும் போட்டி ஜெர்மனியில் இன்று தொடங்குகிறது.

முனிச் நகரில் ஜூன் 8-ம் தேதி வரை இப்போட்டி நடைபெறவுள்ளது.

இதில் ஐஸ்வரி பிரதாப் சிங் தோமர், மனு பாக்கர் மெகுலி கோஷ் உள்ளிட்ட 23 இந்திய வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>